සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

**Department of Samurdhi Development**

සමාජ සවිබලගැන්වීම් හා සුබසාධන අමාත්‍යාංශය

சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு

**MINISTRY OF SOCIAL EMPOWERMENT AND WELFARE**

| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>**எனது இல** DDD/HO/04/circular<br>My No | ඔබේ අංකය<br>**உமது இல** ..........................................<br>Your No | දිනය<br>**திகதி** 2017.03.08<br>Date |

**சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம் 2017/05**

சகல மாவட்ட செயலாளர்கள்/ மாவட்ட சமுர்த்தி மேலதிகப் பணிப்பாளர் தலைமையதிபதி,

சகல மாவட்ட பணிப்பாளர்களுக்கும்,

**<u>சமூக வலுவூட்டல் மற்றும் கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டம் - 2017</u>**

**<u>"சமுர்த்தி உற்பத்தி மாதிரிக் கிராம" வேலைத்திட்டம்.</u>**

நிலைபேரான அபிவிருத்தி இலக்கத்தினை அடைந்து கொள்ளும் நோக்கில் 2017 ஆம் ஆண்டில் வறுமை ஒழிப்பின் பொருட்டான அரசாங்க கொள்கையுடன் இணைந்ததாக உற்பத்திக் கிராமங்களிலிருந்து சமுர்த்தி பயனாளிகளை வலுவூட்டும் பொருட்டு **"உற்பத்திகளை அடிப்படையாகக் கொண்ட"** சமுர்த்தி உற்பத்தி மாதிரிக் கிராம வேலைத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் திட்டங்களைத் தயாரித்துள்ளது.

**02.** அதன் கீழ் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தி மாதிரிக் கிராமங்களும் உட்பட்டதாக மாதிரிக் கிராமமாக மேம்படுத்தக் கூடிய புதிய கிராமங்களை (ஒரு மாவட்டத்திலிருந்து உயர்ந்தபட்சம் 03 கிராமங்கள்) இந்த வேலைத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசித்துள்ளதுடன் தெரிவு செய்யப்படுகின்ற கிராமங்களின் கீழ் குறிப்பிடப்படும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஏற்ற பிரகாரம் வேலைத்திட்டங்களை செயற்படுத்துதல் வேண்டும் என இங்கு விசேடமாக சுட்டிக்காட்டுகின்றேன்.

- விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடி, கைத்தொழில், மற்றும் சேவைகளை வழங்குதல் ஆகிய ஏதோ ஒரு உற்பத்தி நடவடிக்கை ஒன்றினை விருத்தி செய்யக்கூடியதாக இருத்தல்.
- பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளின் பொருட்டு விசேட கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும்.
- வர்த்தகத்திற்கு அடையாளமாக "சமுர்த்தி உற்பத்திகளை" வெளிக்காட்டக்கூடியவாறு மாதிரிக் கிராமத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.
- உற்பத்தி துறைக்குறியதான உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியின் பொருட்டும் கவனத்தினைச் செலுத்துதல்.


1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya ,Battaramulla

| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අධ්‍යක්ෂ (මානව සම්පත්)<br>பணிப்பாளர் ( மனிதவளம்)<br>Director (Human Resource) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director ( Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2873802/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 011-2887280 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | Hot Line: 011- 2887722 |
| E-mail- | dg@divineguma.gov.lk | diradmin@divineguma.gov.lk | finance@divineguma.gov.lk | Hot Line:0112-885582 | |
| | | Hot Line : 0112-889007 | | | |

- சந்தைப்படுத்தல் தொடர்புகளின் பொருட்டு அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களின் ஒழுங்கிணைப்புக்களைக் கட்டியெழுப்புதல்.
- சரியாகவே வலுவூட்டக்கூடிய சமுர்த்திப் பயனாளிக் குடும்பங்களை இனங்காண்பதும், கிராமத்தின் சகல சமுர்த்தி பயனாளிக் குடும்பங்களையும் குறித்த உற்பத்தி நடவடிக்கைகளின் பொருட்டு பங்களிப்புச் செய்து கொள்ளல்.
- விசேடமாக கவர்ச்சியான வளங்கள் அதிகமாகவுள்ள சுற்றாடல் நேயமிக்க கிராமம் ஒன்றினை உருவாக்குதல்.

**03. கிராமங்களைத் தெரிவு செய்தல்.**

1. புதிய கிராமங்களை தெரிவு செய்வது தொடர்பில் DDD/04/07/Samurdhi Village என்ற இலக்கமும் 2017.01.24 ஆம் திகதியிடப்பட்டதுமான கடிதத்தின் பிரகாரம் செயற்படுவதுடன் தங்களால் பெயரிடப்படுகின்ற <u>புதிய கிராமம்</u> ‘‘சமுர்த்தி உற்பத்திகளின் மாதிரிக் கிராமங்கள் என அபிவிருத்தி செய்யக்கூடிய ஆற்றல்கள்’’ தொடர்பில் திருப்திப்படல் வேண்டும்.
2. 2016 ஆம் ஆண்டில் சமுர்த்தி மாதிரிக் கிராமமாக அபிவிருத்தி செய்வதற்கு ஆரம்பிக்கப்பட்ட கிராமங்களிலிருந்து ‘‘சமுர்த்தி உற்பத்தி மாதிரிக் கிராமம் என அபிவிருத்தி செய்யும் ஆற்றலுள்ள’’ கிராமங்களின் பொருட்டு மாத்திரம் நிதி ஒதுக்கீடுகளை வழங்க உத்தேசித்துள்ளதனால் மேலே 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள கிராமங்களுக்கு மேலதிகமாக இக்கிராமத்தினையும் விசேடமாக இனங்காணுதல் வேண்டும்.
3. மேலும் இவ்வாறு தெரிவு செய்யப்படுகின்ற கிராமங்களுக்குறிய சம உற்பத்திகளை மேற்கொள்கின்ற அண்மிய கிராமங்கள் இருப்பின் அக்கிராமங்களும் உட்பட்டதாக ‘‘சமுர்த்தி உற்பத்தி கொத்தனிக் கிராமங்கள்’’ என அபிவிருத்தி செய்யக் கூடிய ஆற்றல்கள் தொடர்பிலும் கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும்.

**04. பயனாளிகளை இனங்காணுதல்.**

சமுர்த்தி பயனாளிகளை வலுவூட்டுவதனை இலக்காகக் கொண்டு இந்த வேலைத்திட்டத்தினை செயற்படுத்த வேண்டியதுடன் குறைந்த வருமானம் பெறும் அல்லது குறைந்த வருமானம் பெறாத குடும்பங்கள் மற்றும் பெண்களை அடிப்படையாக கொண்ட குடும்பங்களையும் பங்களிப்புச் செய்து கொண்டு வேலைத்திட்டத்தினை செயற்படுத்தல் வேண்டும்.

**05. உற்பத்தி அபிவிருத்தி திட்டமிடலைத் தயாரித்தல்.**

பிரதேச செயலாளர், மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர், மாவட்ட ஒழுங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் தலைமையக முகாமையாளர்களுடன் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் சமுதாய அடிப்படை பிரதிநிதிகளின் பங்கேற்புடன் பந்தி இலக்கம் 02 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதனை இலக்காகக் கொண்டு 2017.03.31 ஆம் திகதிக்கு முன்னர் அபிவிருத்தி திட்டமிடலைத் தயாரித்தல் வேண்டும்.

இந்த உற்பத்தி அபிவிருத்தி திட்டமிடலுக்கு இணைப்பு 01 இற்குறிய (அதாவது DDD/04/07/ச.உ.மா.கி 2017 மற்றும் 2017.02.21 ஆம் திகதியிடப்பட்ட அறிக்கை) விபரமும் உள்ளடக்கப்படல் வேண்டும்.

**தயாரிக்கப்பட்ட அந்த அபிவிருத்தி திட்டமிடலின் பொருட்டு**

1. குறித்த சமுதாய அடிப்படை அமைப்பின் சிபாரிசினைப் பெற்றுக்கொள்ளல்.
2. உதவிச்சேவைகள்/ தொழிற்நுட்பச்சேவை உத்தியோகத்தர்களின் சிபாரிகளைப் பெற்றுக்கொள்ளல்.
3. மாவட்ட செயலாளரின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளல்.
4. 2017.04.20 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பித்து நிதி ஒதுக்கீட்டினை/ கட்டுநிதியினை பெற்றுக் கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

**06. நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்ளல்.**

1. தெரிவு செய்யப்படும் ஒரு புதிய கிராமத்தின் பொருட்டு ரூபா மில்லியன் 7இற்கான நிதி ஒதுக்கீட்டளவு/ கட்டுநிதியளவு அங்கீகரிக்கப்படுகின்றது.
2. 3வது பந்தியின் 2இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தி மாதிரிக் கிராமங்களின் பொருட்டு மாத்திரம் ரூபா மில்லியன் 2இற்கான நிதி ஒதுக்கீட்டினை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

   அவ்வாறு இருந்தாலும் சமுர்த்தி கிராமங்களின் உற்பத்திகளது உற்பத்தித்திறன் மற்றும் தேவையின் பிரகாரம் மேலதிக நிதி ஒதுக்கீடு/ கட்டுநிதியினைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்புகள் உள்ளதுடன் சிறந்த செயற்பாட்டு உற்பத்திக் கிராமங்களின் பொருட்டு மாத்திரம் இச்சந்தர்ப்பத்தினை வழங்க உத்தேசித்துள்ளது.
3. ஒதுக்கப்படுகின்ற நிதி ஒதுக்கீடுகள்/ நிதியின் கீழ் பயனாளிக் கருத்திட்டத்தின் பொருட்டு உயர்ந்தபட்சமான திணைக்கள பங்களிப்பானது ரூபா 50,000/= ஆகும்.
4. ஆகக் குறைந்த பயனாளிப்பங்களிப்பானது 40%மாகும் என்பதுடன் அது உழைப்பு, மூலப்பொருட்கள், அல்லது பிறிதொரு பங்களிப்பொன்றாக இருக்கலாம்.

**07. கண்கானிப்பு நெறிப்படுத்தல் மற்றும் மதிப்பீடுகள்.**

1. பந்தி இலக்கம் 05 இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் உற்பத்தி அபிவிருத்தி திட்டமிடலைத் தயாரித்த குழு மாதமொன்றிற்கொரு தடவை கூடி உற்பத்தித் திட்டமிடல் குறிப்பிட்ட நோக்கில் பயனளிக்கின்றதா என்பது தொடர்பில் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது மற்றும் முறைமைப்படுத்துவது என்பன மேற்கொள்ளப்படல் வேண்டும்.
2. தலைமையக முகாமையாளர், குறித்த சமுர்த்தி வங்கி முகாமையாளர் கருத்திட்ட முகாமையாளர்களுடன் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரினதும் மாவட்ட ஒழுங்கிணைப்பு உத்தியோகத்தரின் அடிக்கடி கண்கானிப்பின் கீழும் அபிவிருத்திப் பணிகளை செயற்படுத்துதல் வேண்டும்.
3. இங்கு சமுதாய அமைப்பினையும் கருத்திட்டக் கண்காணிப்பின் பொருட்டு பங்குபற்றச் செய்து கொள்ள வேண்டியதுடன் சமூக கணக்காய்வின் பொருட்டு தேவையான சூழலை ஏற்படுத்துதல் வேண்டும்.
4. மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரால் மாதாந்த மாவட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் சகல உத்தியோகத்தர்களுக்கும் முன்மாதிரி ஒன்றினைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு இந்த வேலைத்திட்டத்தின் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்வதுமிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும்.
5. முன்னேற்றத்தினை இணைப்பு 02 இன் மூலம் தேவைப்படும் எச்சந்தர்ப்பத்திலும் தலைமைக்காரியாலயத்திற்கு வழங்கக்கூடிய விதத்தில் தயாரிப்பதற்கும் முறைமைப்படுத்துவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

6. மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி/ மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரால் தனது மாவட்டத்திற்குள் செயற்படும் சமுர்த்தி உற்பத்தி மாதிக் கிராமங்கள் தொடர்பான முழுமையான கண்காணிப்பினை மேற்கொள்ள வேண்டியதுடன் ''சமுர்த்திப் பயனாளிகளை வலுவூட்டுவதன்'' பொருட்டு அடிக்கடி கவனத்தினை செலுத்துவதனை இத்தால் சுட்டிக்காட்டுகின்றேன்.

**08. நிருவாகச் செலவுகள்.**

- இந்த வேலைத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற அரசாங்க செலவிலிருந்து 1.5% த்தினை நிருவாகச் செலவாக மேற்கொள்ளமுடியும் என்பதுடன் அதிலிருந்து 0.5% த்தினை மாவட்டச் செயலகத்திற்கும் எஞ்சிய 1% த்தினை பிரதேச செயலகத்திற்கும் பிரித்து செல்கின்ற பிரகாரம் இருத்தல் வேண்டும்.
- கருத்திட்டங்களை செயற்படுத்தும் போது அரசாங்கத்தின் அங்கீகரித்த பெறுகை முறைகள், நிதிப்பிரமாணம், இச்சுற்றறிக்கை ஆலோசனைகள் மற்றும் குறித்த பிற சுற்றறிக்கை ஆலோசனைகளைப் பின்பற்றி செயற்படுத்தப்பட வேண்டியதுடன் தரப்படுத்தப்பட்ட விலைமனுக்களையும் கவனத்தில் கொண்டு குறித்த நேரொத்த நிறுவனங்களின் சிபாரிசுகளையும் பெற்றுக் கொண்டு கொடுப்பனவுகளை மேற்கொள்வது அத்தியவசிமாகின்றது.

இச்சுற்றறிக்கை தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படுமிடத்து தொலைபேசி இலக்கங்கள் 011-2873801/ 011-2869824/ 011-2872253 இன் மூலம் அல்லது divinegumalh@yahoo.com மின்னஞ்சல் முகவரியின் ஊடாக சமூக வலுவூட்டல் மற்றும் கிராமிய அபிவிருத்திப் பிரிவை தொடர்பு கொள்ளவும்.

சமுர்த்தி உற்பத்திகள் நிறைந்த மாதிரிக் கிராமம் ஒன்றினை உருவாக்குவது தொடர்பில் தாங்கள் உட்பட தங்களது உத்தியோகத்தர்கள் வழங்கும் ஒத்துழைப்பினைப் போற்றி மதிக்கின்றேன்.

நீல் பண்டார ஹப்புஹின்ன.
பணிப்பாளர் தலைமையதிபதி

பிரதிகள்:-

1. சமூக வலுவூட்டல்கள் மற்றும் நலனோம்புகை கௌரவ அமைச்சர் திரு.எஸ்.பி. திஸாநாயக்க அவர்கள் - த.கூ.க. பொருட்டு
2. சமூக வலுவூட்டல்கள் மற்றும் நலனோம்புகை கௌரவ பிரதி அமைச்சர் திரு.ரஞ்சன் ராமநாயக்க அவர்கள் - த.கூ.க. பொருட்டு
3. சகல மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர்கள் - த.கூ.க. பொருட்டு
4. சகல பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள் - த.கூ.க. பொருட்டு
5. செயலாளர் - சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு - த.கூ.க. பொருட்டு
6. மேலதிக செயலாளர் (கிராமிய அபிவிருத்தி / சமுர்த்தி) சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு - த.கூ.க. பொருட்டு
7. பிரதேச செயலாளர் ………………….. - த.கூ.க. பொருட்டு, உ.ந. பொருட்டும்

8. கணக்காய்வுத் தலைமையதிபதி,
கணக்காய்வுத் தலைமையதிபதி திணைக்களம் - த.கூ.க. பொருட்டு

9. பிரதம கணக்காளர், ச.அ.திணைக்களம் - த.கூ.க. பொருட்டு
உ.ந.பொருட்டும்

10. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் - ச.அ.திணைக்களம் - த.கூ.க. பொருட்டு

11. சகல பிரிவுத் தலைவர்கள்- ச.அ.திணைக்களம் - த.கூ.க. பொருட்டு
உ.ந. பொருட்டும்

12. சமுர்த்தி தலைமையக முகாமையாளர்........................ உ.ந. பொருட்டும் மற்றும் மகா சங்க முகாமைத்துவப் பணிப்பாளர்/ சமுர்த்தி கருத்திட்ட/ சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை விளக்கமளிக்கும் பொருட்டும்.

Translated By: - M.M.M. Jawhar (Translator)